පොදු දේපළ රැකගැනීමේ වැඩසටහන
பொது வளங்களை பாதுகாப்பதற்கான திட்டம்
Programme for Protection of Public Resources

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

No 183/5, High Level Road, Colombo 06 Tel: 011 5627432 Fax: 011 5882225 Email: 2015pppr@gmail.com

2015- 01-04
PPPR/MM/SR 03

# ஜனாதிபதி தேர்தலின் போது அரச ஊடகங்களின் செயற்பாடுகள் பற்றிய கண்காணிப்பு அறிக்கை – 03

அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற பொது மக்களின் பண வீண்விரயத்தினை குறைக்கும் நோக்கில், ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம் (TISL) மேற்கொள்கின்ற பொது உடமைகள் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், அரச ஊடகங்களின் செயற்பாடு பற்றி இந்த ஊடக கண்கானிப்பின் மூலம் கவனம் செலுத்தப்படுகின்றது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் விழுமியங்களுக்கு ஏற்ப அரச ஊடகங்கள் அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக நேர்த்தி, நியாயம், பாரபட்சமின்மை மற்றும் சமநிலைமையான தகவல்களை வெளியிடுகின்றனவா? விவாதம் மற்றும் கலந்துரையாடலுக்கான பொருத்தமான மக்கள் களத்தினை வழங்குவதன் மூலம் வாக்காளாருக்கு அறிவுபூர்வமான தீர்மனங்களை எடுப்பதற்கான வசதியினை வழங்குகின்றனவா? போன்ற விடயங்கள் குறித்து இந்த பகுப்பாய்வின் போது விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. இந்த கண்காணிப்பில் பயன்படுத்துகின்ற முறையியல்களின் மூலம் ஊடகங்களின் உள்ளடக்கம் மற்றும் அவற்றின் தரம் அளவீட்டு ரீதியாக ஆராயப்படும். இதன் போது ஏற்றுகொள்ளப்பட்ட ஊடக நியமங்கள் மற்றும் ஒழுக்க விழுமிய ரீதியான ஊடக செயற்பாடு பற்றி விசேட கவனம் செலுத்தப்படும்.

தேர்தல் காலத்தில் அரச ஊடகங்களின் நடத்தை பற்றி கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு அவ்வப்போது இவ்வாறான அறிக்கைகளை முன்வைக்கவும், தேர்தல் முடிவில் இது பற்றிய முழுமையான அறிக்கையினை முன்வைக்கவும் பொது வளங்களை பாதுகாக்கும் செயற்பாட்டின் ஊடக கன்கானிப்பு குழு எதிர்பார்க்கின்றது.

இவ் அறிக்கை மூலம் முன்வைக்கப்படுகன்ற எமது கண்காணிப்புகள் சம்பந்தமான உங்களது கருத்துக்கள், மற்றும் ஜனாபதி தேர்தலில் அரச ஊடக செயற்பாடு பற்றி உங்களது கண்காணிப்பு விபரங்கள் ஆகியவற்றை எமக்கு அனுப்பிவைப்பதன் மூலம் இந்த செயற்பாட்டை மிகச் சிறப்பாக நிறைவேற்ற உங்கள் பங்களிப்பினையும் பெற்றுக் கொடுக்களாம்.

எமது முகவரி
ppprmm@gmail.com
ஊடக கண்காணிப்பு பிரிவு, டிரான்ஸ்பேரன்சி இன்டெர்நெஷனல் சிறிலங்கா, 183/5இ ஹய்லெவல் வீதி, கொழும்பு 06

டிசமபர் 20 முதல் 26 திகதி வரையிலான காலப்பகுதியில் தேசிய தொலைகாட்ச்சி மற்றும் சுயாதீன தொலைகாட்ச்சி சேவை (ITN) சிங்கள மற்றும் தமிழ் இரவு செய்தி ஒலிபரப்புக்காக ஒதுக்கப்பட்ட நேரம் 19 ஜனாதிபதி வேட்பாளருக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட விதமே இங்கே காணப்படுகின்றது. இக் கண்காணிப்பின் போது செய்திகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நேரத்தில் தேர்தல் செய்திகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை இனங்கண்டு அது ஜனாதிபதி வேட்பாளருக்கு இடையே பகிர்ந்து சென்ற விதத்தை கவனத்திள் கொள்ளப்பட்டது. இக் கண்காணிப்பின் போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட இலத்திரன் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெரிகள் பற்றிய **அதி விஷேட வர்த்தமானி அறிக்கை**[1] ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊடக விழுமியங்களை அடிப்படையாக கொண்டு எமது கண்காணிப்பினை மேற்கொண்டுள்ளோம்

## ஜனாதிபதி தேர்தலின் போது அரச இலத்திரன் ஊடகத்தின் (தேசிய தொலைகாட்சியின்) செயற்பாடு இரவு 8 மணி செய்தி

குறிப்பிட்ட வாரத்தில் தேசிய தொலைகாட்சியின் இரவு 8 மணி செய்திக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நேரம் 231 நிமிடங்கள் 25 விநாடிகள் ஆகும் அதில் 59 நிமிடம் 27 விநாடி நேரத்தை செய்தி ஒளிபரப்பினுள் ஒளிபரப்பபடும் விளம்பரங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அதே நேரம் 41 நிமிடம் 39 விநாடிகள் தேர்தலுடன் தொடர்பு படாத ஏனைய செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட வாரத்தினுள் தேர்தல் பற்றி மக்கள் மத்தியில் விளிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான (Voter Education) செய்திகளுக்காக 4 நிமிடங்களும் 17 விநாடிகளும் மத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது.




- தேர்தல் தொடர்பான செய்திகள்
- தேர்தனுடன் தொடர்பற்ற செய்திகள்
- வர்த்தக விளம்பரங்கள்
- வாக்காளர் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்தும் அறிவித்தல்கள்

(செய்திகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நேரத்தினுள் தேர்தல் சம்பந்தப்பட்ட செய்திகள் மற்றும் ஏனைய செய்திகளுக்காக நேரம் ஒதுக்கபப்பட்டிருந்த விதம்)

**ஏழு நாட்களிலும் தேர்தல் செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்த நேரம் ஜனாதிபதி வேட்பாளருக்கிடையே பகிர்ந்து சென்றுள்ள விதம்**

**தேசிய தொலைகாட்சி - இரவு 8 மணி செய்தி (சிங்களம்)**

நிமிடம்




**MR** – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியின் வேட்பாளர் (தற்போதய ஜனாதிபதி) தொடர்பான செய்தி

**MS** – புதிய ஜனநாயக முன்னணி (பொது) வேட்பாளர் தொடர்பான செய்திகள்

**Others** – ஏனைய வேட்பாளர்கள் தொடர்பான செய்திகள்

ஐக்கிய மக்கள் முன்னணி வேட்பாளருக்கு (தற்போதய ஜனாபதி) அவரது கட்சியின் கருத்துக்களை வெளியிடுவதற்காக ஏழு நாட்களிலும் செய்தி ஒளிபரப்பில் மிக தெளிவாக நேரத்தை ஒதுக்கி இருந்த போதிலும் (வாரத்தினுள் 78 நிமிடங்களும் 57 விநாடிகள்) ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் இடையில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருக்கு (பொது வேட்பாளருக்கு) ஒதுக்கப்பட்ட (42 நிமிடங்களும் 31 விநாடிகள்) தவிர்ந்த எந்த ஒரு வேட்பாளருக்கும் எந்த ஒரு நேரமும் ஒதுக்கப்படவில்லை என்பது தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்த நேரமும் தமது கட்சியின் கொள்கையினை தெளிவுபடுத்துவதற்காகவும் எதிர் தரப்பின் செயற்பாடுகளை விமர்சிப்பதற்காகவும் தமது மதிப்பினை உயர்த்தி கொள்வாதற்காகவும் சாதகமான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற விடயம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்

நேரத்தில் ஒரு பகுதியினை அவர் பங்கேற்ற கூட்டங்கள் பற்றிய விபரங்களை தருவதற்காகவும் அதில் எஞ்சிய மிகுதி நேரத்தை அவரது மதிப்பை குறைக்கவும், சீர் குழைக்கவும் உபயோகபடுத்தப்பட்டிருப்பது தெரியவருகின்றது.

## சுயாதீன தொலைகாட்சி (ITN) - இரவு 7 மணி செய்தி (சிங்களம்)

குறிப்பிட்ட வாரத்தினுள் சுயாதீன தொலைகாட்சி சேவையின் இரவு 7 மணி செய்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நேரம் 200 நிமிடங்களும் 7 விநாடிகள் ஆகும். அதில் 37 நிமிடங்களும் 22 விநாடிகளும் செய்தி ஒளிபரப்பு நேரத்தினுள் விளம்பரகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது 18 நிமிடங்களும் 51 விநாடிகள் தேர்தல் அல்லாத செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வாரத்தினுள் தேர்தல் பற்றி மக்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக (Voter education) 7 நிமிடங்களும் 4 விநாடிகளுமே ஒதுக்கப்பட்டுள்ளது.




- தேர்தல் தொடர்பான செய்திகள்
- தேர்தனுடன் தொடர்பற்ற செய்திகள்
- வர்த்தக விளம்பரங்கள்
- வாக்காளர் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்தும் அறிவித்தல்கள்

(செய்திகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நேரத்தினுள் தேர்தல் சம்பந்தப்பட்ட செய்திகள் மற்றும் ஏனைய செய்திகளுக்காக நேரம் ஒதுக்கபப்பட்டிருந்த விதம்)

ஏழு நாட்களிலும் தேர்தல் செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்த நேரம் ஜனாதிபதி வேட்பாளருக்கிடையே பகிர்ந்து சென்றுள்ள விதம்

சுயாதீன தொலைகாட்சி - இரவு 7 மணி செய்தி (சிங்களம்)

நிமிடம்




**MR** – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியின் வேட்பாளர் (தற்போதய ஜனாதிபதி) தொடர்பான செய்தி

**MS** – புதிய ஜனநாயக முன்னணி (பொது) வேட்பாளர் தொடர்பான செய்திகள்

**Others** – ஏனைய வேட்பாளர்கள் தொடர்பான செய்திகள்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருக்கு (தற்போதய ஜனாபதி) அவரது கட்சியின் கருத்துக்களை வெளியிடுவதற்காக ஏழு நாட்களிலும் செய்தி ஒளிபரப்பில் மிக தெளிவாக நேரத்தை ஒதுக்கி இருந்த போதிலும் (வாரத்தினுள் 83 நிமிடங்களும் 5 விநாடிகள்) ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் இடையில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருக்கு (பொது வேட்பாளருக்கு) ஒதுக்கப்பட்ட (47 நிமிடங்களும் 52 விநாடிகள்) தவிர்ந்த எந்த ஒரு வேட்பாளருக்கும் எந்த ஒரு நேரமும் ஒதுக்கப்படவில்லை என்பது தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்த நேரமும் தமது கட்சியின் கொள்கையினை தெளிவுபடுத்துவதற்காகவும் எதிர் தரப்பின் செயற்பாடுகளை விமர்சிப்பதற்காகவும் தமது மதிப்பினை உயர்த்தி கொள்வாதற்காகவும் சாதகமான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற விடயம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்தை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்ற விதத்தை அவதானிக்கின்ற போது அதே முன்னணியை சேர்ந்த பேச்சாளர்களின் ஒன்றுக்கொன்று முரனான கருத்துகளை வெளிக்கொண்டுவரும் விதத்திலும் வேட்பாளரின் மதிப்பை குறைக்கவும், சீர் குழைக்கவும் உபயோகபடுத்தப்பட்டிருப்பது தெரியவருகின்றது.

# தேசிய தொலைகாட்சி - இரவு 7 மணி செய்தி (தமிழ்)

குறிப்பிட்ட வாரத்தினுள் தேசிய தொலைகாட்சி தமிழ் அலைவரிசையாகிய நேத்ரா இரவு 7 மணி செய்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நேரம் 205 நிமிடங்களும் 59 விநாடிகள் ஆகும். அதில் 30 நிமிடங்களும் 30 விநாடிகளும் செய்தி ஒளிபரப்பு நேரத்தினுள் விளம்பரகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது 81 நிமிடங்களும் 30 விநாடிகள் தேர்தல் அல்லாத செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வாரத்தினுள் தேர்தல் பற்றி மக்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக (Voter education) 9 நிமிடங்களும் 7 விநாடிகளுமே ஒதுக்கப்பட்டுள்ளது.




- தேர்தல் தொடர்பான செய்திகள்
- தேர்தனுடன் தொடர்பற்ற செய்திகள்
- வர்த்தக விளம்பரங்கள்
- வாக்காளர் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்தும் அறிவித்தல்கள்

(செய்திகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நேரத்தினுள் தேர்தல் சம்பந்தப்பட்ட செய்திகள் மற்றும் ஏனைய செய்திகளுக்காக நேரம் ஒதுக்கபப்பட்டிருந்த விதம்)

ஏழு நாட்களிலும் தேர்தல் செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்த நேரம் ஜனாதிபதி வேட்பாளருக்கிடையே பகிர்ந்து சென்றுள்ள விதம்

தேசிய தொலைகாட்சி - இரவு 7 மணி செய்தி (தமிழ்)

நிமிடம்




**MR** – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியின் வேட்பாளர் (தற்போதய ஜனாதிபதி) தொடர்பான செய்தி

**MS** – புதிய ஜனநாயக முன்னணி (பொது) வேட்பாளர் தொடர்பான செய்திகள்

**Others** – ஏனைய வேட்பாளர்கள் தொடர்பான செய்திகள்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருக்கு (தற்போதய ஜனாபதி) அவரது கட்சியின் கருத்துக்களை வெளியிடுவதற்காக ஏழு நாட்களிலும் செய்தி ஒளிபரப்பில் மிக தெளிவாக நேரத்தை ஒதுக்கி இருந்த போதிலும் (வாரத்தினுள் 97 நிமிடங்களும் 12 விநாடிகள்) ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் இடையில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருக்கு (பொது வேட்பாளருக்கு) ஒதுக்கப்பட்ட (3 நிமிடங்களும் 19 விநாடிகள்) தவிர்ந்த எந்த ஒரு வேட்பாளருக்கும் எந்த ஒரு நேரமும் ஒதுக்கப்படவில்லை என்பது தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்த நேரமும் தமது கட்சியின் கொள்கையினை தெளிவுபடுத்துவதற்காகவும் எதிர் தரப்பின் செயற்பாடுகளை விமர்சிப்பதற்காகவும் தமது மதிப்பினை உயர்த்தி கொள்வாதற்காகவும் சாதகமான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற விடயம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்தை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்ற விதத்தை அவதானிக்கின்ற போது, அவர் பல இடங்களில் வெளியிட்ட கருத்துக்களை தொகுத்து அவற்றை உருகுழைய செய்து அதன் மூலம் புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளரின் மதிப்பை குறைக்கவும், சீர் குழைக்கவும் உபயோகபடுத்தப்பட்டிருப்பது தெரியவருகின்றது.

## சுயாதீன தொலைகாட்சி (ITN) - இரவு 7 மணி செய்தி (தமிழ்)

குறிப்பிட்ட வாரத்தினுள் தேசிய சுயாதீன தொலைகாட்சி தமிழ் அலைவரிசையாகிய வந்தம் இரவு 8 மணி செய்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நேரம் 196 நிமிடங்களும் 29 விநாடிகள் ஆகும். அதில் 11 நிமிடங்களும் 2 விநாடிகளும் செய்தி ஒளிபரப்பு நேரத்தினுள் விளம்பரகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது 71 நிமிடங்களும் 2 விநாடிகள் தேர்தல் அல்லாத செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வாரத்தினுள் தேர்தல் பற்றி மக்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக (Voter education) 3 நிமிடங்களும் 1 விநாடிகளுமே ஒதுக்கப்பட்டுள்ளது.




- தேர்தல் தொடர்பான செய்திகள்
- தேர்தனுடன் தொடர்பற்ற செய்திகள்
- வர்த்தக விளம்பரங்கள்
- வாக்காளர் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்தும் அறிவித்தல்கள்

(செய்திகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நேரத்தினுள் தேர்தல் சம்பந்தப்பட்ட செய்திகள் மற்றும் ஏனைய செய்திகளுக்காக நேரம் ஒதுக்கபப்பட்டிருந்த விதம்)

ஏழு நாட்களிலும் தேர்தல் செய்திகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்த நேரம் ஜனாதிபதி வேட்பாளருக்கிடையே பகிர்ந்து சென்றுள்ள விதம்

சுயாதீன தொலைகாட்சி வசந்தம் - இரவு 8 மணி செய்தி (தமிழ்)

நிமிடம்




s

**MR** – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனியின் வேட்பாளர் (தற்போதய ஜனாதிபதி) தொடர்பான செய்தி

**MS** – புதிய ஜனநாயக முன்னணி (பொது) வேட்பாளர் தொடர்பான செய்திகள்

**Others** – ஏனைய வேட்பாளர்கள் தொடர்பான செய்திகள்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருக்கு (தற்போதய ஜனாபதி) அவரது கட்சியின் கருத்துக்களை வெளியிடுவதற்காக ஏழு நாட்களிலும் செய்தி ஒளிபரப்பில் மிக தெளிவாக நேரத்தை ஒதுக்கி இருந்த போதிலும் (வாரத்தினுள் 81 நிமிடங்களும் 18 விநாடிகள்) ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் இடையில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருக்கு (பொது வேட்பாளருக்கு) ஒதுக்கப்பட்ட (17 நிமிடங்களும் 57 விநாடிகள்) தவிர்ந்த எந்த ஒரு வேட்பாளருக்கும் எந்த ஒரு நேரமும் ஒதுக்கப்படவில்லை என்பது தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்த நேரமும் தமது கட்ச்சியின் கொள்கையினை தெளிவுபடுத்துவதற்காகவும் எதிர் தரப்பின் செயற்பாடுகளை விமர்சிப்பதற்காகவும் தமது மதிப்பினை உயர்த்தி கொள்வாதற்காகவும் சாதகமான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற விடயம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் முழு நேரமும் அவரது மதிப்பை குறைக்கவும், சீர் குழைக்கவும் உபயோகபடுத்தப்பட்டிருப்பது தெரியவருகின்றது.

**பொது கண்காணிப்பு**

இந்த சிங்கள மற்றும் தமிழ் இலத்திரன் ஊடக செய்தி ஒலிபரப்பிற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நேரத்தினை பற்றி ஆராய்ந்து பார்க்கும் பொழுது நான்கு அலைவரிசைகளிலும் தேர்தல் சம்பந்தமாக மக்கள் மத்தியில் விளிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 5 சதவீதத்திற்கும் மிக குறுகிய காலத்தினையே ஒதுக்கி இருக்கின்றது என்ற விடயம் குறிப்பாக தெரியவறுகின்றது.

எமது முன்னய அறிக்கைகளில் வெளிப்படுத்தியது போன்று தேர்தல் ஆணையாளரினால் ஊடகங்களின் கடைப்பிடிப்பிற்காக வெளியிடப்பட்ட விழுமியங்கள் இந்த ஊடகங்கள் பின்பற்றவில்லை என்பதும் தவரற்ற சமநிலையான பக்கசார்பற்ற ஆகிய ஊடக செயற்பாட்டின் தரத்தினை பேனுவதற்கு தேவையான பெறுமளவு விழுமியங்களை மீறி நடந்திருக்கின்றது என்பதும் தெரியவருகின்றது.

குறிப்பாக தம்மை சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அறிந்து கொள்வதற்காக இன் நாட்டின் பெருமளவு மக்களினால் உபயோகப்படுத்தப்படுகின்ற தொலைகாட்சி அலைவரிசைகள் ஒரு தலைபச்சமாக செயற்படுவதென்பது இத் தேர்தலின் சுதந்திரம் மற்றும் சுயாதீன தன்மைக்கு பாதகமாக அமைகின்றது என்பது தெரியவருகின்றது.

தேர்தல் ஆணையாளர் ஊடக செயற்பாட்டிற்கு தேவையான விழுமியங்கள் வழிகாட்டல் ஆகியவற்றை செயற்படுத்த முயற்சி எடுகின்றமை காணகூடியதாக இருந்தபோதிலும் அரச ஊடக பிரதானிகள் அவற்றை எந்த விதத்திலும் மதித்து நடக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

எஸ். ரனுக்கே

நிறைவேற்று பணிப்பாளர்

ட்ரன்ஸ்பேரன்சி இன்டநெசனல் ஸ்ரீ லங்கா